RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s-22274

# கம்பரின் சமய ஆளுமையும் அறத் தத்துவமும்

**கோ. சந்தனமாரியம்மாள் [அ, *]**

[அ] தமிழ் உயராய்வுத்துறை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோவில்பட்டி-628503, தமிழ்நாடு, இந்தியா

# Kambar's Religious Personality and Moral Philosophy

**G. Santhanamariammal [a, *]**

[a] Department of Tamil, Government Arts and Science college, Kovilpatti-628503, Tamil Nadu, India

* Corresponding Author: gsminiyan@gmail.com

Received: 24-10-2022
Revised: 10-11-2022
Accepted: 16-11-2022
Published: 01-12-2022

Check for updates

**ABSTRACT**

All epic stories convey ideal philosophies to the world. The characters within the story are created as philosophical symbols. The Kamba Ramayana, which is a great epic, also explains the philosophical idea that 'Righteousness Wins and Sin will Fail'. That is also the epic quality of this epic, which is called the sinfulness of this epic. Kambar's religious personality is the main reason for conveying this philosophical idea to the world. The personality of the creator is manifested in his work. In that sense, the article explores through the epic narrative how Kambar's religious orientation and personality have contributed to the preaching of morality.

**Keywords:** Kambar, Kamba Ramayanam, Epic, Symbols

## முன்னுரை

காப்பியக் கதைகள் அனைத்தும் இலட்சியத் தத்துவங்களை உலகுக்கு உணர்த்துவனவாக அமைகின்றன. கதைக்குள் அமையும் பாத்திரங்கள் தத்துவ விளக்கக் குறியீடுகளாகவே படைக்கப்படுகின்றன. பெருங்காப்பியமாகத் திகழும் கம்பராமாயணமும் ‘அறம் வெல்லும் பாவம் தோற்கும்’ என்ற தத்துவக் கருத்தையே விளக்குகின்றது. இக்காப்பியத்தின் பாவிகம் என்று சொல்லப்படுகின்ற காப்பியப் பண்பும் அதுவே. இத்தத்துவக் கருத்தை உலகுக்கு உணர்த்த கம்பரின் சமய ஆளுமை முக்கியக் காரணமாக அமைகிறது. படைப்பாளரின் ஆளுமைத் திறன் அவரது படைப்பில் வெளிப்படுவதுண்டு (Subramaniyan, 1979). அந்தவகையில், கம்பரின் சமயச் சார்பும், ஆளுமையும் அறம் உரைப்பதற்கு எவ்வகையில் உறுதுணையாக இருந்துள்ளது என்பதைக் காப்பியக் கதை நிகழ்வின் வழியாக ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## சமயங்கள்

வாழ்க்கையில் ஒவ்வொரு மனிதனும் அடிப்படையில் ஏதேனும் ஒரு சமயத்தைச் சார்ந்தவனாக வாழ்கிறான். சமயத்தில் பெரிதும் பற்று இல்லாதவனும் கூடத் தனக்கு இடர்ப்பாடுகள் நேரும்போது ஏதேனும் ஒரு சமயக் கடவுளை நினைத்துக் கொள்வதுண்டு. ஆரம்ப காலத்தில் அஃதாவது சமயங்கள் எதுவும் தோற்றம் பெறுவதற்கு முன் மக்கள் இயற்கையைத் தெய்வமாக வழிபட்டனர். இயற்கை வழிபாடு உருவ வழிபாடாகி அதனடிப்படையில் சமயங்களும் தோன்ற ஆரம்பித்தன. பௌத்தமும் சமணமும் தமிழகத்தில் தோன்றியமையால் சங்ககால வாழ்க்கை முறைகளில் மாற்றங்கள் ஏற்பட்டன.

களப்பிரர்களின் ஆட்சிக் காலத்தில் பௌத்த சமயம் வேரூன்றியது. அவர்களின் ஆட்சிக்குப்பின் பௌத்தம் வீழ்ச்சியடைந்தது. பௌத்தத்தின் வீழ்ச்சியில் சமணம் எழுச்சி பெற்றது. பௌத்த சமண சமயத்தாரின் செயற்பாடுகளால் தமிழ்மொழி புறந்தள்ளப்பட்டது. சமணம் துறவறத்தை வலியுறுத்தியது. காதல் உணர்வுகளையும் அவ்வுணர்வுகளுக்கு இடம் தரக்கூடிய இசை, கூத்து முதலிய கலைகளும் புறக்கணிக்கப்பட்டன (Kanthaswamy, 1986). நீதியைப் புகட்டும் அற நூல்கள் தோற்றம் பெற்றன.

இல்லறத்திற்கு எதிர்ப்பு, தமிழ்மொழி புறந்தள்ளப்படுதல் போன்ற செயற்பாடுகளை மக்கள் எதிர்க்க ஆரம்பித்தனர். இச்சூழ்நிலையைச் சைவ, வைணவ சமயத்தார் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டனர். இறைவனுக்கு உகந்தது தமிழ்மொழியே என்பதையும் கடவுளர்கள் இல்லறத்திற்கு உட்பட்டவர்கள்தான் என்பதையும் இச்சமயத்தார் வலியுறுத்தினர். சிவன் தன் மனைவியை இடப்பாகத்திலும், திருமால் தன் மனைவியை இதயத்திலும் வைத்திருக்கின்றனர் என்ற இல்லறத்தோடு ஒட்டிய கடவுள் நம்பிக்கை வளர ஆரம்பித்தது. இரு சமயங்களும் நிலைத்து நிற்பதற்கு ஆலயங்கள் எழுப்பியமையும் காரணமாக அமைந்தன. தொலைத் தொடர்பு வசதி இல்லா காலக்கட்டத்தில் கோயில்களே வெகுசனத் தொடர்பு மையங்களாகச் செயல்பட்டன. ஆண்டவன் முன் அரசன் உட்பட அனைவரும் சமம் என்ற பொதுமைக் கோட்பாட்டை கோயில்கள் உருவாக்கின. ஆலயத் தூய்மை, கடவுள் ஆலாபனை என இறைவனைப் பாடி சமயப் பரப்புரை செய்த பெரியார்கள் சமயங்களின் வளர்ச்சிக்குப் பெரும்பங்காற்றினர். பரம்பொருளை சிவனாக ஏற்று வணங்கும் பிரிவினர் சைவர் என்றும், பரம்பொருளாகக் காட்சி தருவது திருமால்தான் என்று அவதாரப் பெருமைகளை எடுத்தியம்பித் துதிக்கும் பிரிவினர் வைணவர் என்றும் அழைக்கப்பட்டனர். இவ்விரு பிரிவினரும் பக்தி இயக்கத்திற்கு உயிரூட்டியவர்களாகின்றனர். சைவம், வைணவம் ஆகிய இரு சமயங்களையும் கம்பர் கதைப்பின்னல் அமைப்பிற்கு ஏற்ற வகையில் எங்ஙனம் காப்பியத்தில் கையாண்டுள்ளார் என்பதை நிகழ்வின் வழிக் காணலாம்.

## எதிர்நிலைப் பாத்திரங்களின் சமயம்

காப்பியத்தின் எதிர்நிலைப் பாத்திரம் இராவணன். இராமனின் சிறப்பு மேலோங்கிய நிலையில் பேசப்படுவதற்குக் காரணமானவன் (Ismayil, 1982). இராவணன் சைவ சமயத்தைச் சார்ந்தவனாகவும் சிவபெருமான் மீது பக்தி கொண்டவனாகவும் விளங்குகிறான். இச்செய்தியைக் கம்பர் பல இடங்களில் சுட்டிக் காட்டுகின்றார்.

“தாளால் இறுத்தான் தழல்வண்ணன் தடக்கை வில்லைத்

தோளால் இறுத்தான் துணைத் தாதைதன் அன்பின் தோழன்” (Kambar, 2012)

இராமன் சீதையை மணப்பதற்காகச் சிவதனுசுவை ஒடித்தான். சடாயு சீதைக்கு உதவி செய்ய சிவபக்தனான இராவணனின் வில்லைத் தன் கால் வலிமையால் ஒடித்தான் என்கிறார். சிவன் தன்னுடைய பக்தனான இராவணனுக்கு “சந்திரகாசம்” என்னும் தெய்வத்தன்மை வாய்ந்த வாளை அளித்திருப்பதாகவும் கம்பர் காட்டுகிறார். அவ்வாளால்தான் சடாயுவை வெட்டி வீழ்த்துகிறான் இராவணன்.

“வலியின் தலை தோற்றிலன் மாற்ற

அருந்தெய்வ வாளால் நனியும் தலை” (Kambar, 2012)

என்று சடாயு உயிர் நீத்த படலத்தில் குறிப்பிடுகின்றார். இலங்கை காண் படலத்தில் இராமன் தன் தம்பி இலக்குவனனுக்கு இராவணனின் மாளிகையைக் காட்டும் போது,

“வேக வெங்களிற்றின் வன்தோல் மெய்யுறப் போர்த்த தையல்

பாகனின் பொலிந்து தோன்றும் பவள மாளிகையைப் பாராய்!” (Kambar, 2012)

என்று கூறுகிறான். வலிமை மிகுந்த யானையின் தோலை உரித்துத் தன் திருமேனியைப் போர்த்திக் கொண்ட உமையொரு பாகனான சிவபெருமானைப் போன்று பொலிவுடன் விளங்கும் பவள மாளிகையைப் பார் என்று கூறுகின்றான்.

தன் நாட்டின் மீதும் மக்கள் மீதும் நன்மதிப்பு உடையவனாக இருக்கிறான். அழகு பொருந்திய கயிலை மலையைப் பெயர்த்து தன் நாட்டில் வைக்க ஆசைப்படுகிறான். தன் நாடு கண்கவரும் வகையில் அழகு பொருந்தியதாக இருக்க வேண்டுமென நினைத்து இச்செயலைச் செய்கிறான். கயிலையைப் பெயர்க்கும்போது பூமி ஆட்டம் காணுகிறது. இதைக் கண்ட உமாதேவி சிவனிடம் முறையிடுகிறாள். சிவனோ தன் கட்டை விரலால் பூமியை அழுத்துகிறார். கயிலைக்கும் மண்ணுக்கும் இடையில் மாட்டிக் கொள்கிறான். தன்னை விடுவித்துக் கொள்ள தன் தொடை நரம்பை உருவி மீட்டிப் பாடுகிறான். இசையில் மயங்கிய சிவபெருமான் விடுவிக்கிறார். "ஆத்மலிங்கம்" என்ற லிங்கத்தைப் பெற்று வாங்கி வருகிறான். இந்த லிங்கத்தை நேரடியாக இலங்கை மாநகரில் வைக்க வேண்டும். ஒரு முறை வைத்து விட்டால் அந்த இடத்தில் அது நிலை கொண்டு விடும். இலங்கை மாநகரத்திற்குள் வைக்க விடாமல் விநாயகர் சூட்சுமம் செய்கிறார். சிவபூஜை செய்யும் நேரம் சிறுவனாக விநாயகர் வருகிறார். சிறுவனிடம் வஞ்சகம் இருக்காது என எண்ணி லிங்கத்தை ஒப்படைக்கிறார். அச்சிறுவனுக்குக் கை வலிப்பதுபோல் மெதுவாகக் கையைக் கீழே இறக்கிக் கொண்டே வந்து அப்படியே தரையில் வைத்து விடுகிறான். விநாயகர் இலங்கைக்குள் லிங்கத்தை வைத்து விடாமல் தடுத்துவிடுகின்றார். இலங்கையைப் பின்னாளில் அழிக்க லிங்கம் தடையாக அமைந்து விடாமல் இருக்க கம்பன் செய்யும் உத்தியாகும்.

இராவணனின் மகனான இந்திரசித்து, ஒரு பகற்பொழுதுக்குள் உலகங்கள் எல்லாவற்றையும் அழிக்க வல்ல பாசுபதாஸ்திரத்தை சிவபெருமானிடமிருந்து பெற்றதாகக் கம்பர் குறிப்பிடுகின்றார்.

"தானே சிவன் தரப்பெற்றது தவம்நாள் பல உழந்தே

தானே பிறர்அறியாதது தந்தேன் எனச் சமைந்தான்" (Kambar, 2012)

பிறரால் அறியப்படாத இதனை நானே தந்தேன் என்று சொல்லி சிவன் எனக்கு அளித்தது என்று இந்திரசித்து கூறுகிறான். தந்தை சார்ந்திருந்த சைவ சமயத்தையே மகனும் சார்ந்துள்ளமை இவ்விடத்தில் புலனாகிறது. இராவணன் இராமனுடன் போர் செய்யத் தயாரானதைக் குறிப்பிடும் போது,

"ஈசனை இமையா முக்கன் ஒருவனை இருமைக்கு ஏற்ற

பூசனை முறையின் செய்து திருமறை புகன்ற தானம்

வீசினன் இயற்றி மற்றும் வேட்டன வேட்டார்க்கு எல்லாம்

ஆக அறநல்கி ஒல்காப் போர்த்தொழிற்கு அமைவது ஆனாய்" (Kambar, 2012)

எல்லாச் செல்வங்களையும், இமைத்தலே இல்லாத மூன்று கண்களை உடையவனும் தனி முதல்வனுமாகிய சிவபெருமானுக்கு, இம்மை மறுமை இன்பங்களைப் பெறுவதற்கான வழிபாட்டை முறையோடு செய்து, சிறந்த வேதங்கள் கூறிய கொடைத் தொழிலான அறத்தினைச் செய்து, விரும்பியவற்றை விரும்பியவர்க்குக் கொடுத்து, தளர்தலில்லாத போர்த்தொழில் செய்வதற்குத் தயாரானான் என்கிறார் கம்பர். இராவணன் எந்தச் சூழ்நிலையிலும் சிவபெருமானைத் தவிர வேற்று சமயக் கடவுளரை வழிபட்டதாகத் தெரியவில்லை.

காப்பியத்தில் வரும் முரண் பாத்திரங்கள் சைவசமயத்தினராகவே இருக்கின்றனர். கிட்கிந்தையின் அரசனும் சுக்ரீவனின் சகோதரனுமான வாலி சார்ந்திருந்த சமயம் சைவம் ஆகும். வாலி மாதொருபாகனான சிவனை மூன்று வேளையும் துதிப்பவன்(3924). சூலாயுதப் படையையுடைய சிவபெருமானின் அருளை முற்றிலும் பெற்றவன்

"எட்டு மாதிரத்து இறுதிநாளும் உற்று

அட்டம் மூர்த்திதாள் பணியும் ஆற்றலான்" (Kambar, 2012)

எட்டுத்திக்கும் சென்று சிவபெருமானை வணங்கும் ஆற்றலுடையவன் என்றெல்லாம் அனுமன் வாலியின் பெருமைகளை இராமனிடம் சொல்கிறான். வாலி இறந்தவுடன் தாரை,

"அணங்கு ஆர்பாகனை ஆசைதோறும்

உணங்கா ஒண்மலர் கொண்டு உள் அன்பொடும்

இணங்கா காலம் இரண்டொடு ஒன்றினும்

வணங்காது இத்துணை வைக வல்லையோ?" (Kambar, 2012)

என்று கதறுகிறாள். திசைகள் தோறும் சென்று வாடாத மலர்களைத் தூவி மாதொருபாகனை உள்ளன்பொடு மூன்று பொழுதுகளிலும் வழிபடாமல் எவ்வாறு இப்படி உறங்குகிறாய் என்று அழுதுபுலம்புகிறாள்.

## கம்பரின் சமய ஆளுமை

கதைத் தலைவனாகிய இராமனைக் கம்பர் அறத்தின் பாற்பட்ட நீதிநெறிகளை உலகுக்கு உணர்த்தக்கூடிய பாத்திரமாகப் படைத்தளித்துள்ளார். அறம் வெல்ல வேண்டும் என்ற நிலையில் வைணவ சமயக் கடவுளான திருமாலின் அவதாரப் பிறப்பாகவே கம்பர் இராமனைக் காட்டுகின்றார். இக்கருத்தை இராமனின் பிறப்பு பற்றிக் கூறும்போதே குறிப்பிட்டு விடுகிறார். திருஅவதாரப் படலம் முழுக்க அரக்கர்களை அழிக்க திருமால், இராமன் அவதாரம் எடுப்பதாக 'வருவதுரைத்தல்' என்ற உத்தியைக் கையாண்டு சுட்டிச் செல்கிறார் கம்பர். "கொலைத் தொழில் அரக்கர்தம் கொடுமை தீர்ப்பேன்" என்று திருமால் சொன்னதை நினைவு கூர்ந்த வசிட்டன், குழந்தைச் செல்வம் இல்லாத தசரதனிடம் கலைக்கோட்டு முனி யாகம் நடத்தினால் மகப்பேறு உண்டு என்கிறார்.

"இருபது கரம்தலை ஈரைந்து என்னும்அத்

திருஇலி வலிக்கு ஒருசெயல் இன்று எங்களால்" (Kambar, 2012)

இருபது கரங்களையும் பத்துத் தலைகளையும் உடைய அரக்கர்குலத் தலைவன் அருட்செல்வமில்லாத இராவணனால் விண்ணுலகமும் மண்ணுலகமும் வருத்தமுற்று உய்வதற்குரிய வழியே இல்லை என்று திருமாலிடம் முறையிடுகின்றனர்.

விபீடணன் இராவணனுக்கு அறிவுரை கூறும்போது, திருமால் அரக்கர்களை அழித்தற் பொருட்டு இராமனாக அவதரித்துள்ளதாகக் கூறுகிறான். அத்திருமாலின் பேராற்றலையும் அவனைப் பகைத்தோர் அழிவர் என்பதையும் இரணியன் வதைப்படலம் மூலம் விளக்குகிறார்.

கம்பர் வைணவ சமயத்தைச் சார்ந்தவர் என்பது காப்பிய ஆசிரியன் என்ற நிலையில் தென்பட்டாலும், அவரின் சமய ஆளுமையை முழுமையாக வெளிப்படுத்தக் கூடிய இடமாக இப்படலம் அமைந்து விடுகிறது. கதையின் ஊடாடிய நிலையில் ஆசிரியர் குரல் இடம்பெறுவதுண்டு. விபீடணன் கூறும் அறிவுரை ஆசிரியரின் குரலாகவே அமைகின்றது எனலாம். மூலநூலான வான்மீகி இராமாயணத்தில் இப்படலம் இடம்பெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். ஆசிரியர் தம் கருத்தை விளக்கும் இடமாக அஃதாவது தம்முடைய சமய ஆளுமையை வெளிப்படுத்தும் இடமாக இப்படலத்தைப் பயன்படுத்தியுள்ளார் என்பது உறுதியாகிறது.

## சமயங்களைச் சமன் செய்யும் கம்பர்

ஒரு சமயத்தின் வீழ்ச்சியில்தான் மற்றொரு சமயம் வளரத் தொடங்குகிறது. இக்காப்பியத்தில் இராவணன் சைவ மரபைச் சார்ந்தவனாக இருந்தாலும் நேரிடையாக இரண்டு சமயங்களுக்கிடையேயான மோதல் என்பதை காப்பியத்தில் ஆசிரியர் இடம்பெறச் செய்யவில்லை. வைணவ சமயத்தைக் கம்பர் தூக்கிப் பிடிக்கிறார். எனினும் சைவத்தைப் புறந்தள்ளவில்லை. பால காண்டத்தில் ஆற்றுப் படலத்தில், கோசல நாட்டை அணி செய்யும் ஆற்றின் அழகைக் கூறும் கம்பர்

மேகம் கடல்நீரை முகந்து திரண்டிருந்த காட்சியைக் கூறும்போது, இரண்டு சமயக் கடவுளர்களையும் ஒன்றிணைக்கிறார். "நீறு அணிந்த கடவுள் நிறத்த வான்" என்று குறிப்பிடுகிறார். வானில் மேகங்களின் காட்சி வெண்ணீறு அணிந்த சிவபெருமானின் மேனியைப்போல் காட்சி தருகிறது. "திருமங்கை தன்வீறு அணிந்தவன் மேனியின் மீண்டதே" மேகங்கள் கடல் நீரை முகந்து மீண்டதும் வானம் கறுத்திருந்த காட்சி இலக்குமியை மார்பில் தாங்கிய திருமாலின் கறுத்த நிறத்தை ஒத்திருந்தது என்கிறார்.

தாடகை வதம் முடித்து விசுவாமித்திரருடன் மிதிலை நகருக்குள் இராமன் வருகிறான். கன்னிமாடத்தில் நின்று கொண்டிருந்த சீதையைப் பார்க்கிறான். இருவரின் இதயமும் இடம் மாறிக்கொண்டன. சீதையின் நினைப்பாகவே இருந்த ராமனுக்குத் தூக்கம் வரவில்லை. விடியலை நோக்கிக் காத்திருக்கிறான். மெல்லப் பொழுது விடிகிறது. "புகர்முக யானையின் உரிவைப் போர்வை போர்த்த, உதயகிரி எனும் கடவுள் நுதல் கிழித்த விழியேபோல் உதயம் செய்தான்" என்று உவமிக்கிறார் (Kambar, 2012). உருத்திர மூர்த்தியான சிவபெருமானின் நெற்றியிலிருந்து மெல்லத் திறந்த விழிபோல் சூரியன் மெல்ல உதித்தான் என்கிறார். சிவபெருமான் தன் சடைமுடியை விரித்ததுபோல் கதிர்களை விரித்து உலகிற்குக் காட்டினான் என்று சூரியோதயம் பற்றிக் குறிப்பிடுகிறார்.

சீதையுடன் இராமன் கானகம் வருகிறான். கங்கையில் இராமன் நீராடுகிறான். அதைக் கண்டு சீதை மகிழ்ச்சியடைகிறாள். சிவனின் நடனத்தைக் கண்டு ஆனந்தம் அடைந்த உமாதேவியைப் போல் சீதை மகிழ்வுறுகிறாள். அவன் முடியில் பட்டு நீர்த்திவலைகள் அவனின் மேனியில் உருண்டோடுவதைப் பார்க்கிறாள். சிவபெருமானின் விரிந்து பரந்த சடைமுடியில் பட்டு ஓடுவதுபோல் எண்ணி மகிழ்கிறாள் (Kambar, 2012). இவ்விடத்தில் ராமனைக் கம்பர் சிவராமனாகவே காட்டுகிறார்.

இராமன் அகத்தியரைத் தரிசிக்கச் செல்கிறான். அகத்தியர் பொதியமலைக்கு வந்த காரணம் சொல்லப்படுகிறது. சிவபெருமான் உமாதேவியைத் திருமணம் செய்கின்ற காட்சியைப் பார்க்க தேவர்கள் உட்பட அனைவரும் வடக்கே குவிந்ததால் வடக்குப் பகுதி உயர்ந்து விடுகிறது. இதைக்கண்ட சிவபெருமான் தெற்கே பொதிய மலையில் சென்று அமருமாறு அகத்தியரிடம் கட்டளையிடுகிறார். உலகம் முழுதும் ஒரு தட்டில் வைத்தாலும் ஒப்பாக வருதலை உடைய அரிய வாளையும், மேருமலையை வில்லாக வளைத்து திரிபுரங்களை எரித்த வலிய அம்பு ஆகிய படைகளையும் வழங்கி, நீ தங்குவதற்கு ஏற்ற இடம் பஞ்சவடிதான் என்று அகத்திய முனிவர் இராமனிடம் சொல்லி அனுப்புகிறார் (Kambar, 2012). பத்தாண்டுகள் தண்டகவனத்தில் இருந்த இராமன் பிறகு பஞ்சவடி செல்கிறான். சிவ பக்தனான இராவணனிடம் நல்ல பண்புகள் இருந்தன என்பதற்குப் பல இடங்கள் சான்றாக அமைகின்றன.

"பெண்ணனப் பிழைத்தாய் அல்லை உன்னையான் பிசைந்து தின்ன

எண்ணுவென் எண்ணிப் பின்னை என்உயிர் இழப்பெண் என்றான்" (Kambar, 2012)

நீ ஒரு பெண் என்னும் காரணத்தால் உயிர் பிழைத்துள்ளாய். இல்லையென்றால், உன்னை நான் பிசைந்து தின்றுவிட எண்ணுவேன் என்று இராவணன் சீதையிடம் கூறுகின்றான். பெண்மையை மதிக்கும் ஒரு பாத்திரமாக இவ்விடத்தில் கம்பர் இராவணனைக் காட்டுகின்றார். சீதையைக் கடத்திச் சென்றதால் அவனுடைய நற்குணங்களும் மேலெழும்பாமல் போய் விடுகின்றன. அந்தத் தவறைச் செய்வதற்கும் மூல காரணமாக அவன் தங்கை சூர்ப்பணகையே விளங்குகிறாள். சீதையின் அழகை வர்ணித்து அவளின் மேல் ஆசை உண்டாகும்படி இராவணன் உள்ளத்தைக் கெடவைத்தவளும் அவளே.

மாரீசனை மாய மானாக அனுப்பிவைத்து சூழ்ச்சி செய்து சீதையைக் கவர்ந்து சென்றான். மதி மயக்கத்தால் மாற்றான் மனைவியைக் கவர்ந்து சென்று தவறிழைக்கிறான். தவறு செய்தல் இயல்பு எனினும் பலர் எடுத்துரைத்தபோதும் தவறைத் திருத்திக்கொள்ள ராவணன் முயற்சிக்கவில்லை. இராமனிடம் சீதையை ஒப்படைப்பதைக் கௌரவப் பிரச்சனையாக நினைக்கிறான். இந்திரசித்து அறிவுரை கூறியதைக் கேட்டு, என் வலிமையை நம்பியே இந்தப் பெரிய பகையைத் தேடிக் கொண்டேன் என்கிறான். போரில் வெற்றி பெறவில்லையென்றாலும் இராமன் பெயர் நிலைத்திருக்கும் வரை என் பெயரும் நிலைக்குமல்லவா? என்கிறான். தன் முன் நிற்கும் எதிரி அபார சக்திகொண்டவன் என்பதை நன்கு அறிந்தவனாக அவனின் கூற்று அமைகிறது.

"வென்றிலென் என்றபோதும் வேதம் உள்ளனவும் யானும்

நின்றுளென் அன்றோ அவ்இராமன் பேர்நிற்கும் ஆயின்

பொன்றுதல் ஒரு காலத்தும் தவிருமோ பொதுமைத்து அன்றோ

இன்று உளர்நாளை மாள்வர் புகழுக்கும் இறுதி உண்டோ?" (Kambar, 2012)

சாதல் என்பது எல்லார்க்கும் பொது, இன்றிருப்பவர்கள் நாளை சாவது உறுதி, புகழுக்கு மட்டும் சாவென்பது இல்லை என்கிறான். இவ்விடத்தில் காப்பியத்தின் முடிவை ஆசிரியர் சொல்லி விடுகிறார். இராவணன் இறப்பிலும் தோற்பிலும் சமயம் தலை தூக்காமல் இருக்க வேண்டும் என்ற நிலையில் கம்பர் கவனமாக இருந்துள்ளமை தெரிய வருகிறது.

சைவமும் வைணவமும் தழைத்தோங்கிய காலமாக இருந்தாலும் கம்பரின் சமய ஆளுமை அஃதாவது வைணவ சமயம் வெற்றி பெற வேண்டும் என்பதில் கம்பர் முனைப்பாக இருந்துள்ளமையை அறியமுடிகின்றது. காப்பியத்தின் இறுதியிலும், பாற்கடலில் துயில் கொள்வதை விட்டு அயோத்தியில் அவதரித்த இராமன் அனைவரையும் காத்தருளினான் என்று முடிக்கிறார். இம்முடிவில் கம்பரின் ஆளுமைத் திறன் வெற்றி கொண்டதாகவே எண்ண முடிகிறது.

அறம் வெல்லும் பாவம் தோற்கும் என்கிற நாரால் பல கிளைக்கதைகள் பாத்திரங்களைச் சேர்த்துக் கட்டி ஒரு காப்பியமாக்கி இருக்கிறார். அறத்தை மட்டுமே சொல்லிச் செல்லாமல் அறத்திற்கு எதிரான பாவம் பற்றியும் உரைக்க வேண்டும் என்ற நிலையில் அறமும் பாவமும் மோதிச் செல்கின்ற நிலையில் கதைப்பின்னல் அமைகின்றது. அறம் வெல்லும் வரை கதை நிகழ்வினை நீட்டித்துச் செல்கிறார். எதிர்நிலைப் பாத்திரம் கடவுள் பக்தி, உடன்பிறந்தோரிடம் அன்பு, வலிமை என்று எல்லா நிலைகளிலும் பலமுள்ள ஒரு பாத்திரமாக இருந்தாலும் தோல்வியைத் தழுவுகிறது. கம்பர் பாத்திரங்களின் அறிமுகம் பன்புநலண்களைப் புகழ்தல் என்ற நிலையில் சமயங்களைச் சமன் செய்து கொண்டே செல்கிறார். பாத்திரங்கள் மோதிக்கொண்டாலும் சமயங்கள் தலைதூக்கிவிடாமல் சமயச் சண்டையை ஏற்படுத்திவிடாமல் பார்த்துக்கொள்கிறார் கமபர். ஒரு படைப்பாளர் தன் படைப்பிற்குள் பல நூறு பாத்திரங்களைப் படைத்துக் கதையைப் பின்னிச் சென்றாலும் கதையின் இறுதி வரை அனைத்துப் பாத்திரங்களையும் கொண்டு செல்வது இயலாத ஒன்று. வாய்ப்பாக வரும் இடங்களில் பாத்திரங்களை வெட்டிச் செல்வது உண்டு. வீழும் பாத்திரங்கள் இங்கே சைவ சமயம் சார்ந்தவையாக இருக்கின்றன. படைப்பாளரின் உளவியலும் இதற்கு முக்கியக் காரணம் எனலாம்.

## அறம் உரைத்தலும் காப்பியப் பண்பும்

அறம் வெல்லும் பாவம் தோற்கும் என்ற முக்கியச் செயலே இக்காப்பியத்தின் காப்பியப்பண்பாக அமைகிறது. ராமன் ராவணனை வீழ்த்துவதன் வாயிலாக இப்பண்பு கதையில் நிறுவப்படுகிறது. அரக்கர்களை அழித்து தருமம் ஓங்கவே ராம அவதாரம் என்ற கருத்தை அவதார படலத்தில் ராமன் பிறப்புக் கூறும்போதே கம்பர் தெளிவுபடுத்திவிடுகிறார் என்பதை முன்னர் கண்டோம். ஆரண்ய காண்டத்தில் சீதை தன்னை எடுத்துச் செல்ல வரும் ராவணனிடம் அரக்கர் தம்வருக்கத்தோடும் இறந்தனர் முடிவர் என்கிறாள். ராமனும் சுக்ரீவனும் ஒருங்கிருந்த காட்சி பற்றிக் கூறும் கம்பர், 'அரக்கர் என்ற இருளைத்தள்ளி அறம் நிறுத்தற்கேதுவாக காலக் கூட்டம் ஒத்தது' என்கிறார். சீதையை அரக்கியர் கூட்டத்திடையே கண்ட அனுமன் "அறம் வெல்லும் பாவம் தோற்கும் என்னுமீதியம்ப வேண்டும் தகையதோ?" என்கிறான். வருந்திய அனுமன் பின் தெளிவுக்கு வந்தவனாய் "இது அறம் பாவத்தை அளிக்க நிகழ்த்தும் செயலுக்குட்பட்டது என்றெண்ணுகிறான். சீதை கற்புக் காத்த திறத்தைக் கூறும் கம்பர் "வெல்லுமோ தீவினை அறத்தை மெய்ம்மையால்?" என்கிறார். யுத்தகாண்டத்தில் இராமனும் இராவணனும் எதிர் எதிர் நின்று போரிட்டதைக் கம்பர் "பாவமும் தருமமும் எனச் சென்று எதிர் எதிர் தாக்கினர்." என்று தருமமும் பாவமும் மோதுவதாகப் பொதுநிலையில் கூறி, காப்பியத் தொடக்கத்தில் தான் செய்துள்ள அறம் வெல்லும் அவதாரச் செயற்பாட்டை இறுதி வரையில் காட்டியுள்ளார். விபீடணன் இராமனால் முடிசூட்டப் பெற்றவுடன் அறமே மகிழ்ந்ததாகக் கம்பர் காட்டுகிறார்.

“இராவணன் தீமைச் செல்வம் அழிந்தது என்று அறமும் தன்வாய் அவலம் கொட்டிற்றன்றே" என்ற வரிகளால் காப்பியப் பண்பை நிலைநாட்டுகிறார் கம்பர். அறம் பாவத்தை அழிக்கின்ற ஓர் முக்கியச் செயல் என்பதைத் தொடக்கத்திலிருந்து இறுதி வரை ஆங்காங்கே சுட்டிக்காட்டியுள்ளமையை மேற்கண்ட சான்றுகள் மூலம் அறிந்துகொள்ளமுடிகிறது. காப்பியங்களின் இடை இடையே பல்வேறு நிகழ்வுகள் சொல்லப்பட்டிருந்தாலும் படைப்பாளரின் குரலாக அறத் தத்துவமும் ஊடாடிச் செல்வதைக் காணமுடிகிறது. காப்பியத்தில் அறம் வென்றதனால் கம்பரின் சமய ஆளுமையும் வெற்றி பெற்று விட்டதாகக் கருதலாம். கம்பரின் சமய ஆளுமை குறித்த மனப்பதிவு ஒரு பெருங்காப்பியப் புனைவுக்கு வழிவகுத்துள்ளது. உலகுக்கு உணர்த்திய தத்துவத்தின் மறைவில் சமயம் இருப்பதையும் உணரமுடிகிறது.

## References


Ismayil, M.M. (1982) Kamban kanda Raman, Vaanathi Pathippagam, Chennai, India

Kambar, (2012) Kambaramayanam, New century Book House, Chennai, India

Kanthaswamy, S.N. (1986) Kappiya Kurikol, Manivasagar Pathippagam, Chidambaram, India

Subramaniyan, S.V. (1979) Kappiya Punaithiran, Tamil Chidambaram, India


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License